**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 340/2017**

இன்று 2026 ம் ஆண்டு மார்ச் 16 நாள் திங்கள் கிழமை இன்று இந்த வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின்) திருமதி.A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : T.M.சிவக்குமார்

தந்தை பெயர் :

வயது :

தொழில் : வட்ட சார்ஆய்வாளர்

---

**வாதி தரப்பு முதல் விசாரணை**

**1.** எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நான்தாவா சொத்தை எந்த தேதியில் அளவீடு செய்தேன் என்றால் 21.04.2018 ம் தேதி காலை 11.00 மணியளவில் திருப்பூர் வடக்கு வட்டம் செட்டிபாளையம் கிராமம் புல எண்.37/1, 40/1 ஆகியவை மனையிடங்களாக பிரிக்கப்பட்ட மனை எண்.8 மற்றும் 7 நிலஅளவை செய்தேன். சைட் எண்.7 க்கு கிழபுறம் என்ன உள்ளது என்றால் சைட் எண் 6 உள்ளது அதையும் சேர்த்து நிலஅளவை செய்தேனா என்றால் மனை எண்.6 மற்றும் அனைத்து மனைகளையும் அளவீடு செய்தேன்.

நீதிமன்ற ஆணையரின் வாரண்டில் 2.00 ஏக்கர் விஸ்தீரணத்தை அளவீடு செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது.

**2.** சைட் எண்.6,7,8 ஐ அளவீடு செய்வதற்காக எதை வைத்து அத்துக்கள் நிர்ணயம் செய்தேன் என்றால் மொத்தம் 2.00 ஏக்கர் பூமியையும் அளந்து மனை வரைபடத்தின்படி நிலஅளவை செய்யப்பட்டது. மனை எண்.6,7,8 ஐ அளவீடு செய்யும் போது என்ன இருந்தது என்று நான் அறிக்கை கொடுத்துளளேன்

என்றால் மனை எண்.7 மற்றும் 8 மொத்தம் 4200 சதுரடியும், மனை எண்.7 ல் கிழுபுறபகுதியில் 438 சதுரடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

3. நான் அளவீடு செய்த வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த நிலஅளவை வரைபடம் என்றால் சரிதான். நிலஅளவையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நிலஅளவை செய்தபோது மனுதாரர், எதிர்மனுதாரர் அவர்களது வழக்கறிஞர்கள், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நீதிமன்ற ஆணையர் ஆகியோர்கள் உடன் இருந்தனர். எனது வரைபடத்தை தயார் செய்து ஆணையரிடம் வழங்கினேன்.

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**1.** நான் 21.04.2018 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் நிலஅளவை செய்தேன். நீதிமன்ற உத்தரவுப்படி இடத்தை அளக்க வேண்டுமென்று யார் இடத்தை காண்பித்தார்கள் என்றால் ஆணையர் காண்பித்தார். வாதி தரப்பில் நிலஅளவை செய்தபோது யார் உடன் இருந்தனர் என்றால் வாதி இருந்தார். வாதி நிலஅளவை செய்தபோது அந்த இடத்தில் இல்லை என்றும், நான் வாதிக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாக நடந்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி நிலஅளவை செய்தபோது அவர் அங்கு இல்லை என்றும், அவரது மருமகனும், உறவினரும் தான் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால், வாதி என்று ஆணையர் காண்பித்த நபரைத் தான் எனக்கு தெரியும். அவர் வாதியா, வாதியின் மருமகனா என்று எனக்கு தெரியாது.

2. சைட் எண்.7 மற்றும் 8 ஐ மட்டும தான் நான் நிலஅளவை செய்துள்ளேன் என்றால் மொத்தமாக நிலஅளவை செய்யப்பட்டு 7 மற்றும் 8 மனைகளை மட்டும் வரைபடத்தில் குறிப்பிட்டு காண்பித்துள்ளேன். சைட் எண்.6 ஐ முழுமையாக அளவீடு செய்தேனா என்றால் முழுமையாக அளவீடு

செய்தேன். சைட் எண்.7 ஐ அளந்தபோது எவ்வளவு சதுரடி குறைவாக இருந்தது என்றால் 438 சதுரடி குறைவாக இருந்தது. சைட் எண்.6 ஐ அளக்காமல் குறைவாக இருந்த சதுரடியை சைட் எண் 6 ல் தான் உள்ளதாக குறிப்பிட்டு தவறாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனை எண்.6 ல் ஆக்கிரமிப்பு இல்லை மனை எண்.7 ல் தான் ஆக்கிரமிப்பு உள்ளது.

**3.** சைட் எண்.6 ஐ முழுமையாக அளந்ததாக சொல்லும் நான் அதில் 1740 சதுரடி முழுமையாக உள்ளதா என்றால் உள்ளது. சைட் எண்.6 ஐ அளக்காமல் ஒருதலைபட்சமாக 438 சதுரடியை ஆக்கிரமித்துளளதாக நான் ஒருதலைபட்சமாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தை வழங்குவதற்கு முன்பு சைட் எண்.6 ஐ பற்றி எந்தவொரு விபரமும் இல்லாமல் வரைபடத்தை நீதிமன்ற ஆணையரிடம் நான் ஏற்கனவே வழங்கியதாக நீதிமன்ற ஆணையர் 24.11.2018 அன்று குறிப்பாணை தாக்கல் செய்தும், எனக்கு அது குறித்து கடிதமும் அனுப்பியுள்ளார் என்றால் மனை எண்.7 மற்றும் 8 ஐ பொறுத்து மட்டும் அறிக்கை கோரப்பட்டதால் அதை மட்டும் காண்பித்தேன். கடிதம் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம் நீதிமன்ற ஆணையரால் எனக்கு அனுப்பப்பட்டது என்றால் எனக்கு கடிதம் எதுவும் கிடைக்கவில்லை.

**4.** என்னிடம் காட்டப்படும் கடிதத்தை நீதிமன்ற ஆணையர் எனக்கு அனுப்பி விட்டு இதனால் தான் அறிக்கையை அவரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்று 24.11.2018 ம் தேதியன்று குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் முதலில் வழங்கிய அறிக்கையில் திசைகள் சரியாக குறிப்பிடப்படவில்லை என்று நீதிமன்ற ஆணையர் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். திசைகள் குறிப்பிடப்படவில்லை. இந்த காரணங்களால் தான் உண்மைதன்மைகளுடன் அறிக்கை தாக்கல் செய்ய இயலவில்லை என்று நீதிமன்ற ஆணையர் தெரிவித்துள்ளார் என்றால்

தெரியாது. மேற்படி காரணங்களால் தான் சைட் எண்.6 ன் முழு அளவீடுகளோடு மற்றொரு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று எனக்கு ஆணையர் கடிதத்தின் வாயிலாக கோரிக்கை வைத்தார் என்றால் சரியல்ல.

**5.** நான் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் இரண்டாவதாக வழங்கப்பட்டதாக ஆணையர் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வழங்கிய இரண்டாவது வரைபடத்திலும் தேதி மற்றும் திசைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் நான் ஒரே ஒரு வரைபடம் தான் கொடுத்திருப்பேன் அதில் திசைகள் கொடுக்கப்படவில்லை. தேதி மற்றும் திசைகள்கூட குறிப்பிடாமல் கவனகுறைவோடு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காலதாமதமாக அறிக்கை தாக்கல் செய்துள்ளதால் அதன் உண்மை தன்மை கேள்விக்குரியது என்றால் சரியல்ல. நான் முதலில் ஆணையருக்கு வழங்கப்பட்ட அறிக்கை மற்றும் வரைபடத்தை இது வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஒரே ஒரு வரைபடம் மட்டும் கொடுக்கப்பட்டு அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.** நான் முதலில் வழங்கிய அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கடமைபபட்டுள்ளேன் என்றும் அதனை தாக்கல் செய்தால் பிரதிவாதிக்கு ஆதரவாக அமையும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 24.11.2018 க்கு பிறகு நானோ ஆணையரோ தாவா சொத்தை பார்வையிட்டோமா என்றால் இல்லை. மேற்படி வழக்கில் 24.11.2018 ம் தேதியில் அளந்த இடத்திற்கு 6 வருடங்கள் கழித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அந்த அறிக்கையில் உண்மை தன்மை இல்லை என்றால் சரியல்ல. காலதாமதத்திற்கான முறையான காரணம் இல்லை என்றால் காலதாமதத்திற்கான காரணம் எனக்கு தெரியாது. நான் எனது

இரண்டாவது அறிக்கையை காலதாமதமாக கொடுத்ததால் தான் ஆணையரும் காலதாமதமாக அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. நான் ஒரு அறிக்கை தான் வழங்கினேன்.

**7.** சைட் எண்.7 மற்றும் 8 ன் வடபுறம் உள்ள சைட் எண்.3 மற்றும் 4 ஐ அளந்தேனா என்றால் அளந்தேன். அது குறித்த அளவீடுகளை எனது அறிக்கையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு எதிராக செயல்படவேண்டும் என்பதற்காகவே சைட் எண்.3 மற்றும் 4 ஐ அளவுகளை சொல்லவில்லை என்றால் நீதிமன்ற உத்தரவில் சைட் எண்.7 மற்றும் 8 ன் அளவுகளை குறிப்பிட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதால் அதை மட்டும் சொல்லியுள்ளேன். ஒரு இடத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா என்பதை கண்டறியவேண்டும் என்றால் அந்த இடத்தை சுற்றியுள்ள மொத்த இடத்தையும் அளந்தால் தான் ஆக்கிரமிப்பு தெரியவரும் என்றால் சரதான்.

**8.** சைட் எண்.3 மற்றும் 4 ன் சொத்துவிபரமோ அளவுகளோ இல்லாமல் தாக்கல் செய்துள்ள எனது வரைபடம் ஒருதலைபட்சமாக உள்ளது என்றால் சரியல்ல. மனை எண். 3 மற்றும் 4 ல் ஆக்கிரமிப்புகள் இருக்கலாம் என்றால் தெரியாது. அனைத்து மனைகளையும் அளந்து மனை எண்.7 மற்றும் 8 ஐ வரைபடத்தில் காண்பித்துள்ளதாக சொல்லும் நான் லே அவுட் அமைந்துள்ள 2.00 ஏக்கர் பரப்பளவு முழுவதையும் அளந்தேனா என்றால் அளந்தேன். நான் முதலில் தயார் செய்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் கோப்பிலேயே வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதை தாக்கல் செய்தால் தான் உண்மை தன்மை தெரியவரும் என்றால் ஒரு அறிக்கை தான் உள்ளது அதை தாக்கல் செய்து விட்டேன்.

**9.** மனை எண்.3,4,6 ஐ தெளிவாக அளக்க வேண்டுமென்று பிரதிவாதிகள் கூறியும் நானும் நீதிமன்ற ஆணையரும் அளக்கவில்லை என்றால் எனது உத்தரவுப்படி மொத்தமாக அளந்து சைட் எண்.7 மற்றும் 8 ஐ காண்பித்துள்ளேன்.

மனை எண்.3,4 மற்றும் 6 ஐ அளந்திருந்தால் ஆக்கிரமிப்பு எங்கு உள்ளது என்ற விபரம் தெரியவந்திருக்கும் நீதிமன்றஉத்தரவுப்படி அளந்துள்ளேன். வாதிக்கு ஆதரவாக நான் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அறிக்கை மற்றும் வரைபடம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.16 14:44:11 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.